DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 187/2017 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.5 |
| | | Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தாமரைச்செல்வன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 17.04.2023.

**முதல் விசாரணை ):**

1. நான் தற்போது தடய அறிவியில் துறையில் பணிபுரிந்து 29.07.2022 பணி நிறைவு செய்தேன். நான் கடந்த 30.08.2013 அன்று சென்னை தடய அறிவியில் துறையில் அறிவியல் அலுவலர்/ ஆவண நிபுணராக பணிபுரிந்து வந்தபோது உடுமலை காவல் நிலயை காவலர் திரு. கருப்பசாமி அவர்கள் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தின்படி குற்ற எண்.656/12 ல் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் உடுமலை JM-1 நீதிமன்றத்தில் இருந்து மூடி முத்திரையிடப்பட்ட கவரில் ஆய்வுக்காக சென்னை தடய அறிவியல் துறையில் பெறப்பட்டு எனக்கு அனுப்பிவைக்கப்பட்டதை நான் ஆய்வு செய்தேன்.

2. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட ஆவணம்- 1. தமிழ்நாடு மின்சார வாரிய மின் இணைப்பு பெயர் மாற்ற விண்ணப்பத்தில் உள்ள M. சந்தியா மகேஷ் என்ற சர்ச்சைக்குறிய கையொப்பத்திற்கு Q என்று குறியீடு செய்தேன். 14.1.2013 ம் தேதியிட்ட கிரைய ஒப்பந்த பத்திரத்தில் உள்ள M. சந்தியா மகேஷ் என்ற ஒப்புக்கொள்ளப்பட்ட கையொப்பத்திற்கு A1 to A6 வரை

குறியீடு செய்தேன். 06.01.2004 ம் தேயிட்ட பொது அதிகார ஆவணத்தில் உள்ள M. சந்தியா மகேஷ் என்ற ஒப்புக்கொள்ளப்பட்ட கையொப்பங்களுக்கு A7 –A 12 வரை குறியீடு செய்தேன். 24.11.2006 ம் தேதியிட்ட ஒப்பந்த ரத்து பத்திரத்தில் உள்ள ஒப்புக்கொள்ளப்பட்ட கையொப்பத்திற்கு A13 to A17 வரை குறியீடு செய்தேன். மேற்படி உடுமலை குற்றவியல் நீதிமன்றத்தில் இருந்து பெற்றப்பட்ட மாதிரி கையொப்பங்களுக்கு S1 to S 40 வரை குறியீடு செய்தேன். ஒப்புக்கொள்ளப்பட்ட A1 to 17 வரை உள்ள கையெழுத்திற்கும் ஒப்புக்கொள்ளப்பட்ட S1 to S 40 வரை உள்ள மாதிரி கையொப்பங்களையும் சர்ச்சைக்குறிய Q கையெழுத்தையும் கொண்டு கையெழுத்து குணாதியங்களை கொண்டு ஆய்வு செய்ததில் A1 to 17 வரை உள்ள மற்றும் S1 to S 40 வரை உள்ள கையொப்பங்களை செய்த நபர் சர்ச்சைக்குறிய Q கையெழுத்தை எழுதவில்லை என்று சான்று அறிக்கை அளித்தேன். மேற்படி காரண்தாளுடன் கூடிய சான்றறிக்கை **அசாஆ.--- ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. சர்ச்சைக்குறிய Q கையொப்பம் மெதுவாகவும் தயக்கத்துடனும் ஒப்புக்கொள்ளப்பட்ட கையொப்பங்களை போன்று எழுதப்பட்டுள்ளது இதற்குரிய காரணங்களை ஆய்வறிக்கையில் இணைக்கப்பட்ட காரண தாளில் விளக்கமாக கூறியுள்ளேன். எழுதும் திறமை, எழுத்துக்கள் அமைந்துள்ள தன்மை, உருவ வித்தியாசங்கள், எழுத்துக்களை இணைக்கும் தன்மை, எழுத்துக்களை முடிக்கும் தன்மை, எழுத்துக்களின் தனித்தன்மை ஆகியவை ஒப்புக்கொள்ளப்பட்ட கையொப்பங்களில் இருந்து வேறுபட்டுள்ளது. இந்த ஆய்வை நானும் எனது துணை இயக்குநர் மோகன் அவர்களும் சேர்ந்து ஆய்வு செய்து25.10.2013 அன்று ஆய்வறிக்கை ஆவண எண் 235/13 மூலம் நீதிமன்றத்திற்கு நீதிமன்றத்தில் இருந்து பெறப்பட்ட ஆவணங்களையும் எங்களுடைய ஆய்வறிக்கை மற்றும் காரணத்தாளையும் சீல் வைத்த கவரில் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தோம். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. S1 to S 40 வரை உள்ள கையெழுத்தை எழுதிய நபர் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் மேற்படி கையெழுத்து நீதிமன்றத்தில் இருந்து பெற்றப்பட்டதாகும். S1 to S 40 கையொப்பத்திற்கும் A1 to 17 கையெழுத்தும் ஒத்துப்போனதா என்றால் சரிதான். ஒரே நபரால் கையெழுத்து செய்யப்பட்டதா என்றால் சரிதான். S1 to S 40 கையொப்பத்திற்கும் சர்ச்சைக்குறிய Q கையொப்பத்திற்கும் வேறுபாடு

காணப்பட்டது. A1 to 17 கையொப்பம் உடைய ஆவணங்கள் ஆய்வுக்கு அசல் பெறப்பட்டதா நகல் பெறப்பட்டதா என்றால் அசல் ஆவணம் பெறப்பட்டது. காவல் ஆய்வாளர் என்னை சென்னையில் வைத்து விசாரணை செய்தார். என்னை மட்டும் தான் விசாரணை செய்தார்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-Vijayakumar,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.